ஊராட்சி படிவம் எண் : 6

பல்வகை வரவு ரசீது

புத்தக எண் : D.D.No: 198782/26.2.24 **அசல்** பற்றுச்சீட்டு எண் 98572

நாள் : 27.02.2024

..... சுப்புரத்தினம் ..... ஊராட்சி

திரு ..... வடிவேலு வாசகன் ..... என்பவரிடமிருந்து ..... சுப்புரத்தினம் ..... கிராமம்

ரூபாய் ..... 19,000/- ..... ரூபாய் பதினெட்டாயிரத்து ..... ஆயிரம் ..... மட்டும்

..... வரைபடம் வரைந்தமை ..... வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம் வரி வசூலிப்பவர் ஊராட்சித் தலைவர்

குறிப்பு : 1. இந்த பற்றுச்சீட்டு ஊராட்சித் தலைவரின் **Facsimile** - யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால் தான் செல்லுபடியாகும்.

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெறவேண்டும்.

உப்புக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர்/செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை பிறப்பிப்பவர் : திரு.எஸ்.மூர்த்தி.,

ந.க.எண்: 01/2023-2024 நாள்:27.02.2024

பொருள் : மனைப்பிரிவு - தேனி மாவட்டம் - போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம் - உப்புக்கோட்டை ஊராட்சி - கோடங்கிபட்டி வருவாய் கிராமம் - **நில அளவை எண்கள்: 348/7-ல் 3650.00 சதுர மீட்டர்** பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1) தானம் பத்திரம் ஆவணம் எண்:906/2024 நாள்: 01.02.2024.
2)மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், தேனி மாவட்டம் கடிதம் **ந.க.எண்: THENI/E7DV1H91/2023/TCP. நாள்:02.02.2024.**
3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களின் கடிதம் **ந.க.எண்: SWP/10/2023. நாள்:02.02.2024.**
4) மனுதாரர் **திரு.G.லட்சுமிவாசன் க.பெ கணபதி செட்டியர் உப்புக்கோட்டை** அவர்களின் விண்ணப்பம்.07.02.2024.
5)நிலப்பயன் மாற்றம் கட்டணம் மனுதாரர் மூலம் நிலத்தின் சந்தை மதிப்பீட்டில் 3 விழுக்காடு தொகையினை உரிய அரசு தலைப்பில் செலுத்தியது ஒப்புதல் சீட்டுஎண்:20240226002686/26.02.2024

*****

ஆணை:

பார்வை (1)-ல் காணும் கடிதத்தின்படி மனுதாரர், உப்புக்கோட்டை ஊராட்சி கோடங்கிபட்டி வருவாய் கிராமம் **நில அளவை எண்கள்: 348/7-ல் 3650.00 சதுரமீட்டர்** பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக நகர் ஊரமைப்புதுறை உதவி இயக்குநர் அவர்கள் பார்வை (2)-ல் காணும் கடிதத்தின்படி ஊராட்சிக்கு தானமாக வழங்கவேண்டிய இடங்களையும், சாலைப்பகுதிகளையும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதற்கு தெரிவக்கப்பட்டுள்ளது.

பார்வை (3)-ல் காணும் தானப்பத்திரத்தின் மூலம் ஊராட்சிக்கு சேர வேண்டிய சாலைகள், உள்ளாட்சி பயன்பாட்டிற்கான இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கான இடம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக பார்வை(4)-ல் காணும் கடிதத்தில் ஊராட்சிக்கு சேர வேண்டிய கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் நிலப்பயன்மாற்றுக் கட்டணம் செலுத்துமாறும் செலுத்தியவுடன் இறுதி ஒப்புதல் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (5)-ல் காணும் கடிதத்தின்படி நிலப்பயன்மாற்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வை (2) மற்றும் பார்வை (4)-ல் கூறப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் (தெருக்களில் தார்சாலை, வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் வசதிகள் ஆகியவை) விண்ணப்பதாரரே செய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு உப்புக்கோட்டை ஊராட்சி கோடங்கிபட்டி வருவாய் கிராமம் 348/7-ல் 3650.00 சதுரமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகளை மீறி மனைப்பிரிவு செய்யப்படும் பட்சத்தில் இவ்வறிவிப்பானது இரத்து செய்யப்படும் என்ற விபரத்தினையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

முக்கிய அறிவிப்புகள்:

இந்த அனுமதி உத்திரவானது மனுதாரர்/மனுதாரரர்கள் ஆகிய தாங்கள் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் தான் வழங்கப்படுகிறது. மேற்படி தாங்கள் ஏதும் தவறான பொய்யான தகவல்கள் ஏதும் கொடுத்து இந்த அனுமதி உத்திரவு பெற்ற பின்னர் வருங்காலங்களில் இவ்வுராட்சிக்கு தெரிய வரும் பட்சத்தில் உடனுக்குடன் எவ்வித முன்னறிவிப்புமின்று இந்த அனுமதி உத்திரவு இரத்து செய்யப்படுவதுடன் தங்களின் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் தாங்கள் உள்ளாட்சியிடம் பெற்ற இவ்வனுமதி/உத்திரவு செல்லத்தக்கது அல்ல என்று எச்சரிக்கையுடன் அறிவுறுத்தப்படுகிறது.

ஊராட்சி மன்ற தலைவர்,
உப்புக்கோட்டை ஊராட்சி.

பெறுநர்:

1. திரு.க.லட்சுமிவாசன் க/பெ கணபதி செட்டியர்,
   73- பெருமாள் கோவில் தெரு,
   உப்புக்கோட்டை ஊராட்சி,
   போடிநாயக்கனூர் தாலூகா
   தேனி மாவட்டம்.

நகல்:

1. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
   போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம்.
2. சார் பதிவாளர் அவர்கள்,
   சார் பதிவாளர் அலுவலகம் போடிநாயக்கனூர்.
3. வட்டாட்சியர் அவர்கள்,
   வட்டாட்சியர் அலுவலகம் போடிநாயக்கனூர்.